அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை :16/2000

எனது இல.தா/111/2/1-6
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
2000, நவம்பர் மாதம் 10 ஆந் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள்,
நியதிச் சட்டச் சபைகளின் தலைவர்கள் அனைவருக்கும்

## 2000 ரம்ழான் (ரம்சான்) பண்டிகை காலத்தில் விசேட விடுமுறை

இம்முறை ரம்ழான் (ரம்சான்) விழா 2000 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி ஆரம்பமாகி 2000 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி முடிவடைய உள்ளதால் இவ் விழாக்காலத்தில் முஸ்லீம் அரச அலுவலர்களுக்கு/பணியாளர்களுக்கு தொழுகையிலும், மத வழிபாடுகளிலும் கலந்து கொள்ளக் கூடிய ஒழுங்குகளைச் செய்யுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

02. தொழுகைக நாளாந்தம் பின்வரும் நேர அட்டவணைப்படி நிகழும்

| | | | |
|---|---|---|---|
| மு.ப 3.30 முதல் | | மு.ப. 6.00 வரை | |
| மு.ப. 6.30 முதல் | | மு.ப. 7.30 வரை | |
| பி.ப. 6.30 முதல் | | பி.ப. 7.30 வரை | |
| பி.ப. 8.30 முதல் | | இரவு 10.30 வரை | |

03. இக்காலங்களின் போது அவ் அலுவலர்கள்/ பணியாளர்கள் சமய வழிபாடுகளில் கலந்து கொள்ளக் கூடியதாக வேலை நேரங்களை ஒழுங்கு செய்து கொடுத்தல் வேண்டும். தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டும் விசேட லீவு அங்கீகரிக்கப்படலாம்.

04. மேலும் ரம்ழான்(ரம்சான்) பெருநாளில் இறுதித் திகதிக்கு 14 நாட்களுக்கு முன்னதாக அரச சேவை, கூட்டுத்தாபனங்கள்,சட்டவாக்கச் சபைகள் ஆகியவற்றில் கடமையாற்றும் தகைமையுடைய முஸ்லீம் அலுவலர்கள்/ பணியாளர்களுக்கு விழா முற்பணம் வழங்கத் தயவுகூர்ந்து நடவடிக்கை எடுக்கவும்.

ஒப்பம்:எம்.என்.ஜுனைட்
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு